www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 10

தேர்வு எண் | 1 | 0 | 3 | 1 | 2 | |

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2022 - 23

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி – 1

7X1=7

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
   (அ) குலைவகை (ஆ) மணிவகை (இ) கொழுந்துவகை ஈ) இலைவகை
2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
   (அ) எந்+ தமிழ் + நா (ஆ) எந்த + தமிழ் + நா (இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் +நா
3. "உனக்கு பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்கு புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
   (அ) உருவகம் எதுகை (ஆ) மோனை எதுகை (இ) முரண் இயைபு ஈ) உவமை எதுகை
4. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது –
   (அ) புத்தூர் (ஆ) மூதூர் (இ) பேரூர் ஈ) சிற்றூர்
5. 'பெரிய மீசை' சிரித்தார் – இச்சொல்லுக்கான தொகையின் வகை எது?
   (அ) பண்புத்தொகை (ஆ) உவமைத்தொகை (இ) அன்மொழித்தொகை (ஈ) உம்மைத்தொகை
6. பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

   "முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
   மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
   அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
   இணைகிடந்த தேதமிழ் ஈண்டு"

   இப்பாடல் ஒரு ---------
   அ) தொகைப்பாடல் ஆ) தனிப்பாடல் இ) கூட்டுப்பாடல் ஈ) மரபுப்பாடல்
7. இப்பாடலில் வரும் 'கலம்' என்பதன் பொருள்?
   அ) கட்டுமரம் ஆ) கப்பல் இ) ஓடம் ஈ) தோணி

பகுதி – 2

அ)எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். 3x2=6
(10 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

8. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
   முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
9. வசன கவிதை – குறிப்பு வரைக.
10. "அன்னை மொழியே" எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடலை மண்ணுலகப் பேரரசே" ! வரை எழுதுக.
11. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
12. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும் 3x2=

13. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும்,பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
14. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
    வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கன[ம்] தருக.
15. மாஅல் – பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
16. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்[துப்] பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?
17. எய்துவர் எய்தாப்பழி – இக்குறளடிக்கு பொருந்தும் வாய்ப்பாடு எது?
    அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
    இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

## பகுதி – 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். 3X3=9

18. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.' இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
19. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?
20. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
21. கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.
22. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

## பகுதி – 4

அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

23. எண்ணுப்பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ்எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | | |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | | |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | | |

24. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



25. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |
| ஊரின் நடுவே நச்சுமரம் பழுத்தது போன்றது | உயிரினும் ஓம்பப்படும் |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று |

ஆ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X2=4

26. கலைச்சொல் அறிவோம்.
அ. Storm ஆ. Land Breeze
27. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) உப்பில்லாப் ---------------- ஆ) அளவுக்கு ----------------
28. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக (எவையேனும் 4 மட்டும்)
தேன், விளக்கு, மழை விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

## பகுதி – 5

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 2X6=1

29. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)
ஆ) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.
30. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கா உரைக் குறிப்புகளை எழுதுக.
(அல்லது)
ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593